ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# காவலரும் நாவலரும்

ப. லெட்சுமி & முனைவர்ப.ஸ்ரீதேவி
தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதிஇந்திராகாந்திகல்லூரி, திருச்சி – 620 002.
Email ID – sridevi.sigc.edu & lakshmi.sigc.edu

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலத்தில் மன்னர்கள் புலவர்கள் நட்பு அனைவராலும் போற்றிப் புகழ்வதற்குரிய ஒன்றாக விளங்கியதை சங்கப் புறநூல்களின் வாயிலாக உணர முடிகின்றது. பண்டைய தமிழக வேந்தர்களும் புலவர்களும் கொண்டிருந்த நட்புணர்ச்சி என்பது அதிகாரச் செருக்கு, செல்வச் செழிப்பு, இனவேறுபாட்டு உணர்வு இவைகள் எல்லாவற்றையும் கடந்து சமதர்ம சமுதாய உணர்வை வெளிப்படுத்துவனவாக உள்ளன. சங்க காலம் என்பது சாதி வேறுபாடுகளும், வருணப் பாகுபாடுகளும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் நிறைந்த ஒரு சமூகம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இந்தச் சமுதாய சூழ்நிலையில் அரசர்கள் புலவர்களுடன் நெருங்கி நட்புணர்வுடன் பழகவும், அரசர்கள் செய்யும் தவறுகளை உரிமையுடன் கண்டிக்கவும், புலவர்களின் அறவுரைகளையும், அறிவுரைகளையும் சிரமேற்கொண்டு செங்கோல் ஆட்சி புரிந்த மன்னர்களின் செயல்களையும் மன்னர்கள் மக்களுக்காகவும் புலவர்களுக்காகவும் செய்த அறச் செயல்களையும், நீதி, நெறிமுறை வழுவாமல் ஆட்சி புரிந்த திறத்தினை நோக்கும்போது காவலரும் நாவலரும் கொண்டிருந்த நட்பின் மேன்மை புலப்படுகின்றது. சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் புரவலர்களின் நட்புத் திறத்தினை எடுத்தியம்புவதே இவ்வாய்வுக் கட்டுரை நோக்கமாக அமைந்துள்ளது.

**ஆய்வுஅணுகுமுறை**

இக்காலத்தில்புகழுக்காகவும், பொருளுக்காகவும் நட்புரிமை கொண்டாடும் உலகில் சங்கப் புலவர் மன்னர் நட்பு உறவுகளில் குறிப்பிடத் தகுந்த உறவாக அமைகிறது.நட்புக்காகஉயிரைக் கொடுக்கும் பிசிராந்தையார் –நட்பு. புலவர் பொத்தியாரை கோப்பெருஞ்சோழன் குழந்தை செல்வத்தைக் கண்ணால் கண்ட பிறகு வா என்று கூறி தன் நட்பை இறக்கும் தருவாயில்கூட நிரூபித்துக் கொண்ட சோழன். அவன் கூறிய படி குழந்தை பிறந்ததும் வந்து நடுகல் பக்கத்தில் அமர்ந்து உயிர்விட்ட புலவர் பொத்தியார் நட்பு. தம் உயிரினால் புலவர் வறுமை தீர்ந்து விடுமென்றால் தம்முடைய தலையையும் கொடுக்கத்துணிந்த குமணன் – பெருந்தலைச்சாத்தனார் நட்பு. நீண்டநாள் உயிர்வாழ முடியும் எனத் தெரிந்தும் நெல்லிக்கனியைச் சான்றோர்க்குக் கொடுத்து நட்பின் மேன்மையை நிலைநிறுத்திய அதியமான் – ஔவையார் நட்பு. பாரி இறந்த பின்பு அவர் மகள்களை தன் மகளாகக் கருதி

அரும்பாடுபட்டு மணம் செய்து முடிக்கும் செயலைத் தம் தலையாய கடமையாகக் கொண்டு செயலாற்றிய கபிலர். அவர் தன் கடமையை முடித்துவிட்டு பாரியைப் பிரிந்து இருக்கமுடியாத நிலையில் பாரியை நினைத்து உயிர்விட்டார். சங்க காலத்தில் காவலரும் நாவலரும் கொண்டிருந்த நட்பின் சிறப்பையும் மேன்மையும் நட்பு போற்றலும் சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

ஆய்வுப்பயன்:

சங்க காலத்தில் வாழ்ந்த காவலர்கள் நாவலர்கள் தங்களுக்குள் மிகுந்த அன்புடையவர்களாகவும் நட்புடையவராகவும் வாழ்ந்தனர் என்பதன் வாயிலாக இக்கால ஆட்சியில் இருப்பவர்களும் தமிழ் பயின்ற பண்டிதர் புலவர் பெருமக்களையும் அவர்களின் கல்வி நிலை, தனித்திறன் ஆகியவற்றைக் கண்டு வியந்து பாராட்டி ஊரும் உலகும் போற்றும்படி செய்து தன் அருகில் அமர்த்தி அவர்களின் அறிவுரைகளின் படி மக்களைப் பாதுகாத்து செங்கோல் ஆட்சி புரிய வேண்டும் என்பதே இவ் ஆய்வு கட்டுரையின்பயன்.

புறநானூறு:

சங்க இலக்கிய பாடல்களில் பழைய மரபுகள் பல உண்டு. காதல்பற்றிய கற்பனையை அகம் என்றும் பகுத்த பாகுபாடு மரபுகளில் முதன்மையானது ஆகும் ,மனித இனத்தின் காதல் வாழ்க்கைத் தவிர மீதமுள்ள அனைத்து வாழ்வியல் கூறுகளும் புறம் என்பதனுள் அடங்கும் என்பார் மு.வரதராசனார். புறநானூற்றில் நாட்டை ஆளும் தலைவனுடைய சிறந்த செயல்களும் கொடைப்பண்பும் வேந்தர்களின் அறச் செயல்களும் பாடப் பட்டுள்ளன. நூலின் பெயரிலேயே புறம் என்று புறத்திணைப் பாகுபாடு புலப்பட உள்ள நூல் புறநானூறு ஆகும்,புறம்,புறப்பாட்டு,புறநானூறு என்பது நூலின் வேறு பெயர்கள் ஆகும்,ஒவ்வொரு பாடலின் இறுதியில் திணை,துறை பாடியோர் பாடப்பட்டோர் குறிப்புகள் உள்ளன. பெருந்தேவனார் பாடிய சிவபெருமான் வாழ்த்து கடவுள் வாழ்த்தாக அமைந்திருப்பது இந்நூலின் சிறப்பாகும். முரஞ்சியூர் முடிநாகராயர் பாடல் தொடங்கி கோவூர் கிழார் பாடல் ஈறாகப் பல் வேறு புலவர்கள் பாடிய பாடல்கள் அடங்கிய நூல் புறநானூறு ஆகும் சங்க கால மன்னர்களின் வீரம் பற்றிய செய்திகள் மிகுதியாக இடம் பெற்றுள்ள ஒரே நூல் புறநானூறு ஆகும்.

**முன்னுரை**

சங்க காலப் புலவர்கள் புரவலர்களை இறையெனக் கருதிப் போற்றினர். மன்னர்கள் மக்களுக்காக செய்த கொடையையும், வீரத்தையும் புகழ்ந்துபாடி மக்கள் உள்ளத்தில் அரசர்கள் பற்றிய உயர்வான சிந்தனைகளையும், மதிப்பையும் ஏற்படுத்தியவர்கள்புலவர்கள். அதேபோல் காவலர்கள் நாவலர்களால் பாடப்படுதலை ஒரு பெரும் பேறாகக் கருதினர். மன்னர்கள் புலவர்களுக்கு கொடை நேர்தலை துறக்கயுலகத்துச் செலுத்துமெனவும் ஒரு நம்பிக்கையை கொண்டிருந்தனர். இங்ஙனம் சொல்லப்படாத ஓர் ஒப்பந்தம் வேந்தர் புலவர்களிடத்தில் நிலவி இருந்தமையைச் சங்கப்பாக்களின் வழி அறிய முடிகின்றது. அரசர்கள் குறித்த உயரிய எண்ணங்கள் மக்கள் மனதில் பதியும் வகையில் பாடல்கள் இயற்றிப் பெரும் தொண்டாற்றியவர்கள்

புலவர்கள். புலவர்களின் வறுமையைப்போக்க அரசர்கள் காரணமாக விளங்கினர் சங்க காலச் சமுதாயம் புலவர்களைச் சான்றோர்கள் என மதித்துப் போற்றிய பாங்கும் கல்வியையும், புலமையையும் உயர்வாகக் கருதிப் போற்றியத் தன்மையும் அரசருக்கும், புலவருக்கும் நெருங்கிய பிணைப்பு ஏற்படக் காரணமெனலாம். குறிப்பிடத்தக்க காவலர் நாவலர் நட்பிற்குச் சான்றாவோர்கள் பின்வருமாறு,

கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார்

கோப்பெருஞ்சோழன் - பொத்தியார்

அதியமான் - ஔவையார்

பாரி - கபிலர்

குமணன் - பெருஞ்சித்திரனார்

என்று சங்க இலக்கியத்தின் வாயிலாக மக்கள் மனதில் பதிந்தது.

**கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும்**

பிசிராந்தையாரின் ஊர் ‘பிசிர்’ என்பதாகும். இயற்பெயர் ‘ஆந்தையார்’ என்பதாகும். ஒருவரை ஒருவர் காணாது கொண்ட நட்பிற்கு இப்புலவரும், இச்சோழனும் எடுத்துக்காட்டு என்பதனை

**“கேட்டன் மாத்திரை யல்லதியாவதும்**
**காண்டலில்லா தியாண்டு பல கழிய” 1**

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

என்ற கோப்பெருஞ்சோழன் வாய்மொழியிலிருந்து உணரமுடிகின்றது சோழன் வடக்கிருந்து இறக்குங்கால் சோழன் தன் இனிய நண்பன் ஆந்தை தன்னைக் காணவருவான் அவனுக்கு ஒரு இடம் தாருங்கள் என்று கூறினார்.

**“நினைக்குங் காலை மருட்கை உடைத்தே**
**எனைப்பெருஞ் சிறப்பினோ டிங்கிது துணிதல்**
**அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்**
**தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி**
**இசைமரபாக நட்புக் கந்தாக**
**இணையதோர் காலையீங்கு வருதல்” 2**

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

அக்கூற்றுப் பழுதின்றி வந்தமையைப் புறநானூற்றின் வழி உணரமுடிகின்றது. தகவல் தொடர்பு சாதனங்கள் எதுவும் இல்லாத சூழலில் தன் மனதில் தோன்றிய எண்ணம் தன்

நண்பர் மனதிலும் சென்று அடைந்ததிலிருந்து கோப்பெருஞ்சோழன் நட்புணர்வு நமக்கு வியப்பினை ஏற்படுத்துகின்றது. மேலும்,

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**3

பரிமேலழகர் - 2018

என்ற வள்ளுவரின் வாக்கிற் கிணங்க பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனின் நட்பு அதனையும் தாண்டிவிஞ்சி நிற்கின்றது. இடைப்பட்ட தொலைவு எவ்வளவாயினும் சான்றோர் ஓரிடத்துத் தோன்றிய தன்மையர் இருவரும் என்பதனை

**"பொன்னுந் துகிரு முத்து மன்னிய**
**மாமலை பயந்த காமருமணியும்**
**இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்**
**தருவிலை நன்கல மமைக்குங்காலை**
**ஒரு வழித் தோன்றியாங் கென்றுஞ்சான்றோர்**
**சான்றோர் பால ராப**
**சாலார் சாலார் பாலரா குபவே" 4**

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

என்ற புறநானூறு அடிகள் எடுத்தியம்புகின்றன.

**"நாடுகளை விரைந்திணைக்கும் அறிவியற் புதுமைகள் இல்லா அக்கால வரலாற்றிற்கு இந்நட்பு புதுமையானதும் புதிரானதும் ஆகும்".5 என்ற செய்தி**

(முனைவர் கு.வெ.பாலசுப்பிமணியன் 1986)

**புணர்ச்சிப் பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்.6**

பரிமேலழகர்-2018

என்ற திருவள்ளுவரின் கருத்திற்கு வலுசேர்ப்பதாக இவ்விருவரின் நட்பு இருந்திருக்கின்றது.

**கோப்பெருஞ்சோழனும் புலவர் பொத்தியாரும்:**

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து இறந்த ஆற்றாமையைப் பிரதிபலிப்பதாக புலவர் பொத்தியாரின் பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. அவை கையறுநிலைப் பாடல்களாகும். சோழனோடு உடனுயிர் நீக்கத் துணிந்த இவரை மகவு பிறந்தபின் வருக எனக் கூறிச் சோழன் மாய்ந்ததனை

**புகழ்சால் புதல்வன் பிறந்த பின் வாவென**

**என்னிவ ணொழிந்த வன்பிலாள. 7**

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

என்ற புறநானூற்று அடிகளால் உணரமுடிகின்றது.

சோழன் இறந்த பின்னும் நடுகல்லாகி தனக்கு இடம் கொடுத்த தன்மையையும் அந்த இடத்தில் வந்து பொத்தியார் உயிர் நீத்த தன்மையினையும்

**நிலைபேறு நடுக்கல்லாகிய கண்ணும்**

**இடங் கொடுத் தளிப்ப மன்ற 8**

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

என்ற அடிகளால் அறியலாம்.

கோப்பெருஞ்சோழன் பாடுநர்க்கீந்த பல்புகழாளன் ; ஆடுநர்க்கு ஈந்த பேரன்பினன்; அறவோர் புகழ்ந்த செங்கோலன் ; திறவோர் புகழ்ந்த திண்ணன்பினன் ; மகளிர் சாயல் மைந்தர்க்கு மைந்து ; துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில் என்று அவன் திறம்பாடுவார், இப்புலவர்

யானை இறப்ப வருந்திய பாகன் வறிதாய் நிற்கும் கம்பத்தைக் கண்டு கலங்கியது போல வெறுமையாக இருக்கும் அரியணையைக்கண்டு தாம் துயருதலைக் கூறுகின்றார். நெருங்கி பழகிய ஒருவரின் இழப்பில் தோன்றும் மனவருத்தத்தை இப்புலவரின் ஐந்து கையறுநிலைப் பாடல்களும் நமக்கு உணர்த்துகின்றன. இக்கருத்தினை நோக்கும்போது

**“அழிவினவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**

**அல்லல் உழைப்பதாம்** நட்பு”9

பரிமேலழகர்-2018

என்ற வள்ளுவரின் வாக்கு மெய்ப்படுத்தப்படுவதைப் போல கோப்பெருஞ்சோழன் -பொத்தியார் இவர்களின் நட்பு அமைந்திருந்ததனை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

**அதியமானும் ஔவையாரும்**

ஔவையார் புறத்தில் 33 பாடல்கள் பாடியுள்ளார் அதில் 25 பாடல்கள் அதியமானையும் 3 பாடல்கள் அதியன் மகன் பொகுட்டெழினியையும் குறிக்கும் அதியன் -ஔவை நட்பு தந்தை, மகன் என்ற தலைமுறை வழித் தொடர்ந்துள்ளது. என்பது திண்ணம் எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே என்ற புலமை செருக்கமையபாடிய ஔவை பின்னர் அதியனின் அன்பிலும் கொடையிலும் மிகவும் ஈடுபட்டு, யாழொடும் குழலோடும் சிறிதும் ஒத்திராத புதல்வரின் மழலை, தந்தையர்க்கு

உவகைச் செய்தல் போல என் வாய்ச்சொற்கள் அதியனை இன்புறுத்தியது என்று பெருமிதத்தோடு புறநானூற்றில் பறைசாற்றியுள்ளார்.

**“யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா**
**பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்**
**கருள்வந்தனவாற் புதல்வர் தம் மழலை**
**என் வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்**
**கடிமதி லரண் பல கடந்த**
**நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே” 10**

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

அரசு வழிநடத்தலுக்கு புலவர்கள் மற்றும் சான்றோர்களின் அறிவுரைகள் தேவை என்பதனை மன்னர்கள் அறிந்திருந்தனர். அவ்வகையில் ஔவை போன்ற சான்றோர்களை நண்பர்களாகக் கொண்டு அரசர்கள் செங்கோலாட்சி நடத்தினர். அதியமானும் சான்றோரை மதிக்கும் பண்புடையவராதலாலும் தமிழைப் போற்றும் தகையாளராக இருக்கும் காரணத்தினாலும் இறவாத சக்தி கொண்ட நெல்லிக்கனியை அதியமான் ஔவைக்குக் கொடுத்து நீண்ட நாள் சான்றாண்மைத் தழைக்க வழி செய்தார் நெல்லிக்கனியை பெற்ற ஔவையார் அதியமானைச் சிவபெருமான் போன்று ஒளிர்க என்று வாழ்த்தியுள்ளார்.

**“பால் புரை பிறைநுதற் பொலிந்த சென்னி**
**நீலமணி மிடற்று றொருவன் போல” 11**

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

என்ற பாடலால் அறியமுடிகின்றது.

**“சிவபெருமான் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் மேருமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகக் கொண்டு கடைந்ததனால் அதிலிருந்து வெளிப்பட்ட விடத்தைத் தாம் உட்கொண்டு அமுதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்தமையாலும் இதே தன்மையுடைய நீண்ட நாள் உயிர் வாழும் நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்ததால் சிவபெருமானுக்கு ஒப்பாக அதியமான் உவமைப்படுத்தப்பட்டுள்ளான்.**12

(டாக்டர்.கு.சிவப்பிரகாசம் 1986)

சாவா மருந்தெனினும் தானுண்ணாமல் தகைசால் சான்றோருக்கு வழங்கிய இவ்இருவரின் நட்புணர்வு நட்பிற்கே இலக்கணமாகத் திகழ்கின்றது.

“ஔவையார் தாம் வாழும் சூழலைக் கூர்ந்து நோக்கிக் கணிக்க வல்லவர் என்றும் இவரது புலனாற்றல் மிகக் கூறிய தென்றும் அறிஞர் மு.வரதராசனார் தமது இலக்கியவரலாறு என்ற நூலில் கூறியுள்ளார்.

**“நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்னீர பேதையார் நட்பு.”** 13

பரிமேலழகர் – 2018

என்ற வள்ளுவரின் கருத்திற்கிணங்க ஔவை அதியன் நட்புபிறைமதியிலிருந்து முழு நிலவானதனை சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது.

**பாரியும் – கபிலரும்**

பிசிராந்தையார் பொத்தியார் போன்று நட்புக்கு உயிர் கொடுக்கத் துணிந்தவர் கபிலர். அவர் பாரியுடன் உள்ளங் கலந்த கேண்மையுடையவர், பாரியுடன் வாழ்ந்து, பாரி இறந்த பின், அவன் மகளிரை மணம் செய்விக்கும் கடமை பூண்டு, பின்பு பாரியை நினைத்து வடக்கிருந்து உயிர் துறந்த புலனழுகற்ற அந்தணன் ஆவார்.

பாரி மகளிருக்கு மணம் செய்விக்கும் முயற்சியில் இருங்கோவேளிடம் சென்று செல்வத்தை இரவலர்க்கும், தேரை முல்லைக்கும் கொடுத்த பாரியின் மகளிர் இவர்கள் யான் இவர்கள் தந்தையின் தோழன் இப்போது இவர் என் மகளிர் என்று கூறுவதிலிருந்து பாரி கபிலர் நட்பின்திறம் வெளிப்படுகின்றது.

கபிலரின் பாடல்களில் கையறுநிலைப் பாடல்கள் மிகுதி. அதற்கு காரணம் பாரியின் இழப்பு அவரை பெரிதும் பாதித்திருந்தது. அந்த மனவருத்தத்தில் பாரியை நீ நட்புக்குரியவன் இல்லை; உரியவனாயின் என்னையும் உடன் அழைத்துச் சென்று இருப்பாய் என்று பழிப்பது போல புகழ்ந்து உரிமை கோரியுள்ளார்.

**“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு” 14**

பரிமேலழகர்-2018

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்திருக்கின்றனர் என்பதனை அறியமுடிகின்றது.

**குமணனும் - பெருந்தலைச் சாத்தனாரும்**

அருநனி மறந்த கோடுயர் அடுப்பில் ஆம்பி பூக்கவும் பாலில்லா வறுமுலைகளைக் குழந்தை சுவைத்து அழுகின்ற நிலைக்கு என் மனைவி கண்ணீர் உகுக்கவும் உள்ள சூழலில், “குமணனே உன்னைக் கருதி வந்தேன்” எனத் தன் குடும்ப வறுமையை உணர்ச்சி தோன்றப் பெருந்தலைச் சாத்தனர் பாடுகின்றதனை,

**“இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை**

**சுவைத் தொறழுஉந்தன் மகத்து முக நோக்கி**
**நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்க ணென்**
**மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ**
**நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண."** 15

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

என்ற புறநானூற்று அடிகள் தெளிவாக விளக்குகின்றன.

குமணன் நாடிழந்த நிலையில் இப்புலவர் அவனைப் பாட ஈகைச் செல்வனாகிய குமணன் கொடுப்பதற்கு ஒன்றுமில்லாச் சூழலில் தம்பியால் விலை கூறப்பட்டிருக்கும் தன் தலையைப் புலவர்க்கு அளிக்க வாளை எடுத்து தருகிறான். சங்க கால கொடைப் பண்பின் உச்ச நிலையிது என்பதனை

**"கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்**
**பாடி நின்றனெ னாகக் கொன்னே**
**பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்**
**நாடிழந் ததனினு நனியின் னாதென**
**வாடந் தனனே தலையெனக் கீயத்**
**தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்"** 16

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1947)

என்ற புறநானூற்று அடிகள் எடுத்தியம்புகின்றன.

புலவர் தம் நெஞ்சினை உருக்கும் கொடை நிகழ்ச்சியை பெருங் குமணனின் தம்பியாகிய இளங்குமணனிடம் இவ்வாறு கூறுகின்றார் நிலையில்லாத உலகத்தில் இதுவே தம்புகழ் நிறுவும் நெறியென்பார் இப்புலவர்.

பெருஞ்சித்திரனார், பெருந்தலைச் சாத்தனார் என்ற இருபுலவர்களினாலும் குமணனின் வாழ்க்கை அறியப்படுகின்றது. இரவலர்க்கு வரையாது ஈயும் வள்ளல் தன்மைகொண்ட கடையெழு வள்ளல் மரபினர்க்குப்பின் தோன்றிய குமணன், தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு சென்றமை தலையைக் கொடுத்துப் புலவனின் வறுமைக் களைய முயன்றமை ஆகியவற்றின் வாயிலாக அரசரும் புலவரும் கொண்டிருந்த நட்பின் திறம் விளங்கின்றது.

"கடையெழு வள்ளல்களுக்குப் பிறப்பட்ட குமணனின் கொடைச் சிறப்பை பெருஞ்சித்திரனார் பாடி தனக்குள்ள நட்புணர்வை வெளிப்படுத்திக் கொண்டனர்.

ஈகையிலும் பிறருக்கு உதவும் உள்ளத்திலும் மிகுதியான நாட்டம் கொண்ட குமணன் பெருஞ்சித்திரனார் என்னும் சான்றோர்மீது கொண்ட நட்பு புறநானூற்றில் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளது"17

(டாக்டர்.கு.வெ.பாலசுப்பிரமணின் 1986)

**முடிவுரை**

அரசவையில் புலவர்கள் தங்களின் புலமைத்துவத்தாலும் அறிவுத் திறமையாலும், செங்கோல் ஆட்சி அரசர்கள் நடத்துவதற்கு உறுதுணையாக இருந்திருக்கின்றனர். மன்னர்களின் செயல்களில் சரி, தவறு என்றுமனதில்தோன்றியதைஅஞ்சாமல்மன்னனுக்கு அறிவுறுத்தி தோழமைஎண்ணத்துடன்நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர் புலவர்கள், என்ற செய்தியை சங்கப் புறநூல்களில் வழி அறியமுடிகின்றது. ஒழுக்கநெறியையும் பண்பாட்டு மதிப்புகளையும் உயர்ந்த அறங்களையும் மன்னனுக்கு போதித்து ஆட்சி சக்கரத்தை சரியான முறையில் சுழல வைத்துள்ளதால் புலவர்களை மன்னர்கள் கலைஞர் புலவர் என்று பாராமல் உயிர்காக்கும் உற்ற நண்பர்களாகவே கொண்டுவாழ்ந்திருக்கின்றனர் என அறிய முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

| வ.எண் | நூல் பெயர் | ஆசிரியர் பெயர் | பாடல் எண் | முகவரி | பதிப்பு வருடம் |
|---|---|---|---|---|---|
| 1 | புறநானூறு | ஔவை சு .துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 216 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1/140 பிரகாசம் சாலை சென்னை. | 1947 |
| 2. | புறநானூறு | ஔவை சு .துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 217 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1/140 பிரகாசம் சாலை சென்னை. | 1947 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | திருக்குறள் | பரிமேலழகர் உ.ஆ . | 788 | சரதா பதிப்பகம் 4-சாந்தி அடக்கம் 3,ஶ்ரீகிருஷ்ணாபுரம் தெரு ,ராயப்பேட்டை சென்னை 600014 | 2018 |
| 4. | புறநானூறு | ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 218 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1/140 பிரகாசம் சாலை சென்னை. | 1947 |
| 5. | சங்க இலக்கியத்தில் புறப்பொருள் | முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் | பஎண் 50 | மெய்யப்பன் பதிப்பகம் 53 புதுத்தெரு சிதம்பரம் 608001 | 1986 |
| 6. | திருக்குறள் | இராஜேந்திரன்(தேவிரா).உ.ஆ | பா.எண்.785 | நந்தினி பதிப்பகம், 3/11, ஒயிட் ஹவுஸ் னு பிளாக் முதல் பிரதான சாலை, அண்ணாநகர் கிழக்கு, சென்னை 600102. | 1918 |
| 7. | புறநானூறு | ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 222 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1/140 பிரகாசம் சாலை சென்னை. | 1947 |
| 8 | புறநானூறு | ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 223 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1/140 பிரகாசம் சாலை சென்னை. | 1947 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | திருக்குறள் | பரிமேலழகர் உ.ஆ<br>. | 787 | சரதா பதிப்பகம்<br>4-சாந்தி அடக்கம்<br>3,ஶ்ரீகிருஷ்ணாபுரம்<br>தெரு ,ராயப்பேட்டை<br>சென்னை 600014 | 2018 |
| 10 | புறநானூறு | ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 92 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்<br>1/140 பிரகாசம் சாலை<br>சென்னை. | 1947 |
| 11 | புறநானூறு | ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 91 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்<br>1/140 பிரகாசம் சாலை<br>சென்னை. | 1947 |
| 12 | புறநானூற்றில் வாழ்வியல், விழுமியங்கள் | டாக்டர் கு.சிவப்பிரகாசம் | ப.149 | மணிவாசகர் பதிப்பகம்,55,லிங்கித் தெரு,சென்னை-1 | 1991 |
| 13 | திருக்குறள்<br>. | பரிமேலழகர் உ.ஆ | 782 | சரதா பதிப்பகம்<br>4-சாந்தி அடக்கம்<br>3,ஶ்ரீகிருஷ்ணாபுரம்<br>தெரு ,ராயப்பேட்டை<br>சென்னை 600014 | 2018 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | திருக்குறள் | பரிமேலழகர் உ.ஆ | 786 | சரதா பதிப்பகம் 4-சாந்தி அடக்கம் 3,ஶ்ரீகிருஷ்ணாபுரம் தெரு ,ராயப்பேட்டை சென்னை 600014 | 2018 |
| 15 | புறநானூறு | ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 164 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1/140 பிரகாசம் சாலை சென்னை. | 1947 |
| 16 | புறநானூறு | ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உ.ஆ | 165 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1/140 பிரகாசம் சாலை சென்னை. | 1947 |
| 17 | சங்க இலக்கியத்தில் புறப்பொருள் | டாக்டர் கு.வெ.பாலசுப்பிரமணியன் | 95 | மெய்யப்பன் பதிப்பகம் 53 புதுத்தெரு சிதம்பரம் 608001 | 1986 |